செய்தி வெளியீடு எண்: 479 நாள் : 03.10.2015

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 29.9.2015 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் சென்னை, இராயபுரத்தில் 2 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் மணிமண்டபம், சுயமரியாதைச் சுடரொளி என்.ஜீவரத்தினம் மணிமண்டபம் மற்றும் நூலகம் ஆகியவற்றை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 6 கோடியே 53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழரசு அலுவலகம் மற்றும் அச்சக கட்டடத்தினையும், 4 கோடியே 68 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப் பயன் (Animation & Visual Effects) பாடத்திட்டத்திற்கான புதிய கட்டடம் மற்றும் முன்காட்சி திரையரங்கத்தையும் திறந்து வைத்து, 4 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நான்கு வண்ண வெப்ஆப்செட் இயந்திரத்தின் செயல்பாட்டினை துவக்கி வைத்தார்கள்.

நாட்டிற்காக பெரும் தொண்டாற்றி பல்வேறு தியாகங்களைச் செய்த தலைவர்கள் மற்றும் சான்றோர்களை சிறப்பிக்கும் வகையிலும், அவர்களின் தியாகங்களை வருங்கால சந்ததியினர் அறிந்து கொள்ளும் வகையிலும், நினைவிடங்கள், நினைவு இல்லங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் மணிமண்டபங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு உருவாக்கி பராமரித்து வருகிறது.

அந்த வகையில், சென்னை, மயிலாப்பூர் மீனவர் பகுதியில் பிறந்து, வழக்குரைஞராக திகழ்ந்து, அண்ணல் காந்தியடிகள் ஒத்துழையாமை போராட்டத்தை தொடங்கிய போது வழக்குரைஞர் அங்கியை தீயிட்டு கொளுத்திவிட்டு தீவிரமான விடுதலைப் போராட்ட வீரராக மாறி, முதன் முதலாக “மே தின” நாளை விவசாயிகள், தொழிலாளிகள் மற்றும் மீனவர்கள் சார்பில் கொண்டாடி, சிந்தனையாலும் செயலாலும் அல்லும் பகலும் ஏழைத் தொழிலாளி வர்க்கத்திற்காகப் பாடுபட்ட ஓய்வறியா தொண்டர் சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் அவர்கள் மற்றும் திராவிட இயக்கத்தின் ஐம்பெரும் தலைவர்களில் ஒருவராகவும், மீனவர் இனத்தின் தலைவராகவும், மீனவ மக்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக விளங்கியவரும், பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்பையும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நம்பிக்கையையும் பெற்ற,

‘‘கடல் கடலாளிக்கே’’ என்று முழங்கி, சாதி, மத வேறுபாடுகளை ஒழிப்பதில் முதன்மையாக திகழ்ந்தவருமான சுயமரியாதைச் சுடரொளி என்.ஜீவரத்தினம் ஆகியோரது நினைவைப் போற்றும் வகையில் சென்னை, இராயபுரத்தில் மணிமண்டபங்கள் அமைக்கப்படுவதுடன், நவீன வசதிகளுடன் கூடிய நூலகமும் தமிழ்நாடு அரசால் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்திருந்தார்கள்.

அதன்படி, சென்னை – இராயபுரத்தில் 2 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் மணிமண்டபம், சுயமரியாதைச் சுடரொளி என்.ஜீவரத்தினம் மணிமண்டபம் மற்றும் நூலகத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

தமிழரசு அலுவலகத்தின் பணிகள் சென்னை, அண்ணா சாலையிலுள்ள அரசு எழுதுபொருள் அச்சுத்துறை வளாகத்தில் பழைய கட்டடத்தில் இடநெருக்கடியில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சென்னை, தரமணியில் புதிய தமிழரசு அலுவலகம் மற்றும் அச்சக கட்டடம் கட்டுவதற்கும், நான்கு வண்ண வெப்ஆப்செட் அச்சக இயந்திரம் வாங்குவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டார்கள்.

அதன்படி, சென்னை, தரமணியில் 6 கோடியே 53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழரசு அலுவலகம் மற்றும் அச்சக கட்டடத்தினை திறந்து வைத்ததோடு, 4 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நான்கு வண்ண வெப்ஆப்செட் இயந்திரத்தின் செயல்பாட்டினையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

மேலும், சென்னை தரமணியில் உள்ள எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில், 16,536 சதுர அடி கட்டட பரப்பளவில் 3 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப் பயன் பாடத்திட்டத்திற்கான புதிய கட்டடத்தையும், 99 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன மயமாக்கப்பட்ட முன்காட்சி திரையரங்கத்தையும் மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் திறந்தும், துவக்கியும் வைக்கப்பட்ட திட்டங்களின் மொத்த மதிப்பு 17 கோடியே 55 லட்சம் ரூபாய் ஆகும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி, தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள்: 3.10.2015